முருகப்பெருமான் துணை

**மகான் திருமங்கை ஆழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**14.09.2023**, வியாழக்கிழமை

1. பிரணவக் குடில் கொண்ட குருவே
பிரணவ சக்தி வழி உலகினை
சரவணச் சுடரேற்றி காத்தருள
சற்குருவாய் வந்த குருவே
2. குருவே ஆறுமுக அரங்கனே
குவலயத்தில் உன் பெருமை கூறி
உறுதிபட சோபகிருது யாளி திங்கள்
உரைப்பேன் எழுநான்கு திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஆவணி மாதம் 28ம் நாள், 14.09.2023, வியாழக்கிழமை)
3. வாரமதில் அறிவுரை ஆசிதனை
வழங்குவேன் திருமங்கை ஆழ்வாரும்
சோரமில்லா ஞானப் படைகள்
செகமெல்லாம் அரங்கன் படைக்க
4. படைக்கவே சேவை ஆற்றிவர
பண்பான மக்கள் சமூகம்
தடையின்றி உலகம் கண்டிட
தவராஜன் கொள்கை அனைத்தும்
5. அனைத்தும் மக்களிடை சேர
அரங்கனின் சீடர் பெருமக்கள்
துணிந்து சேவை பெருக்கி
தொடர்ந்து பங்காற்றி வருக
6. வருகவே எங்கும் நல்லோர்களாக
வல்லமை கொண்ட தருமவான்களாக
உருவாகி அற்புதம் நிகழும்
உயிர்கொலை நீக்கி வாழும் தன்மை

7. தன்மை பெருக்கி மக்களெல்லாம்
தவசியின் அனுகூலம் பெற்றவராக
நன்மைபுரிவர் உலகினில்
நல்லாட்சித் தரும் வண்ணம்
8. வண்ணமுடன் ஆற்றல் பெருகி
வருங்காலம் ஞானிகள் நிறைந்த
மண்ணுலகாக மாற்றம் கண்டு
மகான் அரங்கன் வழி கோடானகோடி
9. கோடி ஞானிகளும் உருவாகி
குவலயம் ஞான ஆட்சிப் பெறும்
தேடி மேலவர்கள் மகா சக்திகள்
துணைவர எல்லா மாற்றங்களும்
10. மாற்றங்களும் கண்டு உலகம்
மகத்துவமும் சர்வபலமும் காணும்
தேற்றம்பெற கலியுக மக்களெல்லாம்
தேடி அரங்கன் தடம் வர
11. வருகவே சடுதி மாற்றமும்
வரமாக அரங்கன் வேண்டலுக்கு
முருகப் பெருமான் நடத்தி அருள
முழுமை பாதுகாப்பு நிறைந்த பூமியாகும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—